சிறுவர் பாடல்கள்

(தரம் 03,04,05 இற்குரிய ஆசிரியர் வழிகாட்டி மற்றும் பாடநூலிருந்து தொகுக்கப்பட்டவை)

தொகுப்பு

எம்.வை.எப். சபியா (ஆசிரியை)
குளி/ காசிம் முஸ்லிம் வித்தியாலாயம்
திவுரும்பொல.

1 - பாவைப் பிள்ளை

சின்னச் சின்ன பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

என்னைப் போலக் காலும்
என்னைப் போலக் கையும்
இனிய கண்ணும் வாயும்
இயைந் திருக்கும் பாவை

சட்டை இட்டுப் பார்ப்பேன்
தொப்பி இட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

என் மடியிலிருக்கும்
என் அருகிற் படுக்கும்
என்னுடனே பகலும்
இரவும் ஒன்றாய் இருக்கும்.

-மு.நல்ல தம்பி

2- மறவாதே

பெற்ற தாயை மறவாதே!
பேணும் தந்தையை மறவாதே!

கற்ற குருவை மறவாதே!
கடவுள் எண்ணம் மறவாதே!

கல்வியை என்றும் மறவாதே!
கற்றதைச் செய்ய மறவாதே!

நல்லவர் சொல்லை மறவாதே!
நாட்டுப் பணியை மறவாதே!

ஒழுக்கம் தன்னை மறவாதே!
உண்மை பேச மறவாதே.!

-தே.ப. பெருமாள்.

www.teachmore.lk

3- மழையே! மழையே!

சிலு சிலு சிலுவென மழை
சிறிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை.

மழை மழை இனியது மழை
மகிழ்ச்சி தருவது மழை
மலர்களை நனைப்பது மழை
மண் வாசணை தருவது மழை.

தட தட தடவென மழை
தண்ணீர் பெருக்கிடும் மழை
செடி கொடி மரங்களில் மழை
செம்மண் பரப்பிலும் மழை

பரந்த கடலிலும் மழை
பாழும் கிணற்றிலும் மழை
பெரிதும் சிறிதும் மழை
பிரித்துப் பார்க்குமோ மழை

-செல்லகணபதி-

4- மணல் வீடு

கோடி கோடி பணத்தினால்
மாடி வீடு கட்டுவர்.
கோடி கோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்.

செங்கல் தேவையில்லையே!
சிமிண்டும் தேவையில்லையே!
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவையில்லையே!

ஐந்து நிமிட நேரத்தில்
அழகு மிக்க வீட்டினைச்
சந்து பொந்து இன்றியே
குந்தி நாங்கள் கட்டினோம்.

கடலின் அலைகள் வீட்டினைக்
கரைத்திட்டாலும் பயமில்லை
உடனே புதிய வீட்டினை
உவகையோடு கட்டுவோம்.

ஏடு படிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்!
வீடு உடைந்து போகும் முன்
ஓடி வந்து பாருங்கள்!

–பூ வண்ணன்-

5- வெற்றி

பல முறை திருத்தி வரைந்தால் தான்
பாங்காய் ஓவியம் உருவாகும்!
பலமுறை பாடிப் பார்த்தால் தான்
பண்ணுடன் குரலும் வளமாகும்!

பல முறை நடந்து பார்த்தால் தான்
பாதை புதிதாய் உருவாகும்!
பல முறை ஓடிப் பார்த்தால் தான்
பந்தயப் பரிசு கை கூடும்!

பல முறை படித்துப் பார்த்தால் தான்
பாடம் மனதில் பதிவாகும்!
பல முறை நினைத்துப் பார்த்தால் தான்
படித்தவை கல்மேல் எழுத்தாகும்!

மயங்கித் தயங்கி நிற்காதே!
மனமும் தளர்ந்து போகாதே!
முயன்று முயன்று பார்த்தால் தான்
முடிவில் வெற்றி உன்னைத் தேடும்.

-கவிஞர் பல்லவன்-

6-அந்த இடம்

அப்பா என்னை அழைத்துச் சென்றார்
அங்கு ஓரிடம்.
அங்கிருந்த குயிலும் மயிலும்
ஆடித் திரிந்தன.

பொல்லா நரியும் புனுகு பூனை
எல்லாம் நின்றன.
குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி
கூட இருந்ன.
குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்துக்
"குறுகு"றென்றது.
யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது.
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது!

கரடி கூட உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று!
சிறுத்தை ஒன்று கோபத்தோடு
சீறிப் பார்த்தது!

அங்கு எங்கள் அருகிலேயே
சிங்கம் நின்றது!

கரடி, சிங்கம், புலியைக் கண்டேன்
கண்டும் பயமில்லை.
சூரனைப் போல் நின்றிருந்தேன்!
துளியும் பயமில்லை!

சென்ற அந்த இடம் உனக்குத்
தெரியவில்லையா?
மிருகக் காட்சி சாலைதானே
வேறொன்றும் இல்லை!

-அழ வள்ளியப்பா.

தரம் - 4

7. எங்கும் கேட்டிடலாம்

ஓரிடத்தில் இருந்திடாமல்
ஓடி ஓடிக் கேட்டிடலாம்.
பாடகரைப் பார்த்திடாமல்
பாட்டுக்களைக் கேட்டிடலாம்.

வாத்தியங்கள் இசைத்திடாமல்
வாத்திய இசை கேட்டிடலாம்.
ஊரெங்கும் போய் வராமல்
ஊர்ப் புதினம் கேட்டிடலாம்.

அறிஞர்களைச் சந்திக்காமல்
அறிவுரைகளைக் கேட்டிடலாம்.
உலகமெங்கும் சுற்றிடாமல்
உலகச் செய்தி கேட்டிடலாம்.

விழாக்களுக்குச் சென்றிடாமல்
வர்ணனைகள் கேட்டிடலாம்.
கேட்டிடலாம் கேட்டிடலாம்.
கேட்டுக் கொண்டே இருந்திடலாம்.

வி.என்.எஸ் உதயசந்திரன்.

8. துணை

உடலுக்குத் துணை உயிராகும்.
உழவுக்குத் துணை உழைப்பாகும்.

பாட்டுக்குத் துணை பண்ணாகும்.
பண்புக்குத் துணை படிப்பாகும்.

அரசனுக்குத் துணை அமைச்சாகும்.
அருளுக்குத் துணை அன்பாகும்.

பொருளுக்குத் துணை அறமாகும்
பொறுமைக்குத் துணை அறிவாகும்.

-வே.நல்லதம்பி-

9. குழந்தைகளே கேளீர்

குடை பிடித்து செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடு குடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்.

மழைக் காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்கள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வர வேண்டும்.

வெள்ளத்திலே கல் எறிந்து
விளையாட வேண்டாம்.
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்.

கண்மணிகாள் நீர் சிரங்கு
காலில் வரும் கவனம்.
கண்ணுறக்க மில்லாமற்
கதறியழ வேண்டும்.

அம்மா சொல்லை தட்டாமல்
ஆசிரியர்க் கடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
படித்து வர வேண்டும்.

10. பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள்.

காற்றில் ஆடும் பூக்கள்
கவிஞர் பாடும் பூக்கள்
கொத்துக் கொத்துப் பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்

மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
அன்பைத் தரும் பூக்கள்
அழகுச் சிவப்புப் பூக்கள்.

-வி.என்.எஸ். உதயசந்திரன்-

11. நுங்கு வண்டி

சின்னச் சின்ன நுங்கு
செங்கரும்பு நுங்கு
தின்னத் தின்ன இனிக்கும்
திகட்டிடாத நுங்கு!

தாகம் தீர்க்கும் நுங்கு
தண்ணீர் போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்.
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கண்டேன்.

- செல்லகணபதி-

12.பிராணிகளின் கொண்டாட்டம்

சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங் கூட்டம்

சிலந்திகட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்.

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்.

பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்

பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொட்டும் பூனை.

மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.

13.வழி காண்பேன்.

ஒரு மரமேனும் நான் நட்டு – என்
உயிரைப்போல பேணிடுவேன்!.
ஒரு வர்க்கேனும் சிறு உதவி – நான்
உள்ளன்போடு செய்திடுவேன்!

காகம் வந்து கரைந்திட்டால் - நான்
கைப்பிடிச் சோறு வைத்திடுவேன்!
தாகம் என்று வருவோர்க்கு – நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடுவேன்!

படிப்பறி வில்லா மாந்தர்க்கு – என்
படிப்பால் நன்மை புரிந்திடுவேன்!
துடிக்கும் ஏழை துயர் துடைக்க – நான்
தூங்கா திருந்து வழி காண்பேன்!

14. சின்னச் சின்னப் பறவை

சின்னச் சின்னப் பறவையான
சிட்டுகுருவி,
தேடித்தேடித் திரிவதென்ன?
சிட்டுக்குருவி!
என்ன வேண்டும்? என்ன வேண்டும்?
சிட்டுக்குருவி.
என்னிடம் நீ சொல்ல வேண்டும்
சிட்டுக்குருவி.

உணவு தேடித் திரிகின்றாயோ?
சிட்டுக்குருவி.
ஊக்கமது கைவிடாத
சிட்டுக்குருவி.
பணமும் வேண்டாம் காசும் வேண்டாம்
சிட்டுக்குருவி.
பச்சை நெல்லை நான் தருவேன்
சிட்டுக்குருவி.

கூடுகட்டி வாழ்வதற்கு
சிட்டுக்குருவி.
குச்சிகளைத் தேடுகின்றாயா?
சிட்டுக்குருவி.
பாடுபட்டு வேலை செய்ய,
சிட்டுக்குருவி.
பாடமெல்லாம் கற்றுத்தரும்
சிட்டுக்குருவி.

வீட்டுக்குள்ளே எந்த இடம்
சிட்டுக்குருவி.
வேண்டுமோ நீ சொல்லிடுவாய்
சிட்டுக்குருவி.
கூட்டை அங்கே கட்டிக்கொள்வாய்
சிட்டுக்குருவி.
கொடுக்க வேண்டாம் வாடகையும்
சிட்டுக்குருவி.

கூட்டை நாங்கள் கலைக்க மாட்டோம்
சிட்டுக்குருவி.
குஞ்சுகளைத் தொடவும் மாட்டோம்
சிட்டுக்குருவி.
சேட்டையொன்றும் செய்ய மாட்டோம்
சிட்டுக்குருவி.
திண்ணம் இது திண்ணமாகும்
சிட்டுக்குருவி.

அழ-வள்ளியப்பா

15. வெண்ணிலா

இரு விளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே!
இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே!

சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே!
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே!

தயிர்கடலில் வெண்ணெய் போல வெண்ணிலாவே!
தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே!

எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே!
எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே!

வளர்ந்து பின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே!
வறுமைசெல்வ முனக்குண்டோ வெண்ணிலாவே!
ஒரு நாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே!
ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே!

அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே!
அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே!

க. சோமசுந்தரப் புலவர்

அரும்பதங்கள்

இருவிளக்கு : சூரியனும், சந்திரனும்
தூயவொளி : வெண்மையான வெளிச்சம்
அமுதவொளி : குளிர்ந்த இனிய வெளிச்சம்
கலை : சந்திரனின் பாகம்
எண்ணிரண்டு : பதினாறு
விசும்பு : ஆகாயம்

-முத்து-

16. விழித்தெழு

காக்கை பாட்டுப் பாடவே
காலை நேரம் விடிந்தது
தூக்கம் போதும் தம்பியே
சோம்பல் ஏனோ எழுந்திடு!

ஊக்கம் கொண்டு உழைத்திடின்
உயர்ந்த வாழ்வு கிடைத்திடும்
தூக்கம் மிகுந்த சோம்பலால்
துவண்டு போகும் வாழ்க்கையே!

பூக்கள் மீது கும்பலாய்
புதிய தேனை உண்ணவே
ஈக்கள் கூடும் அழகு பார்
இன்னும் தூக்கம் ஏனடா?

சாரை சாரையாகவே
சலித்திடாமல் எறும்புகள்
ஓரமாகச் சென்றுமே
உழைத்துத் தின்னும் அழகு பார்!

தென்றல் வீசும் காலையில்
சீக்கிரம் நீ எழுந்திடு
உன்றன் பாடம் படித்திடு
உயர்ந்த அறிவைப் பெற்றிடு!

வளர்ந்து பின்னும் நீயுமே
வாலிபத்தை அடைந்ததும்
தளர்ந்திடாமல் உழைத்திடு
தக்க வாழ்வு கிடைத்திடும்.

-கவிஞர் செல்லக் கணபதி-

www.teachmore.lk

17. காய்கள் கட்டிய வெருளி

கந்தன் செய்த தோட்டத்தில்
காய்கள் கனிகள் அதிகமாம்
வந்து ஆடு மாடுகள்
வளர்ந்தவற்றைக் கடிக்குமாம்

காய்கள் ஒன்று கூடியே
காக்க வெருளி கட்டின
வாய்கள் திறந்து பேசின
வழி வகுத்துக் கொண்டன

சாம்பல் நீற்றுப் புசனி
தலைக்கு வருவேன் என்றது
பாம்பு போன்ற புடலங்காய்
பக்கக் கைகள் என்றது

பானை போன்ற பூசனி
பருத்த வயிறு என்றது
ஆனை மிளகாய்களும்
அழகு மூக்காய் ஆகின

வெண்டிக்காய்கள் நாங்கள் தாம்
விரல்கள் என்று தொங்கின
நொண்டிக் கால்கள் ஆயின
நுனி வளர்ந்த கரும்புகள்

கனிந்த நிறத் தக்காளி
கன்னம் என்று நின்றது
நனைந்த பயிற்றங் காய்களும்
நாலு மயிராயின

முறுக்கு மீசை இல்லையென்று
முணுமுணுத்துக் கொள்ளவே
நறுக்கி வைத்த அறுகம்புல்
நானிருப்பேன் என்றது

கண்ணில்லாத வெருளி என்று
காய்கள் கவலை கொண்டன
அண்ணன் நாவற் பழவனார்
அதற்கு வந்து குந்தினார்

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை கண்டது
நாடு காடு தாண்டியே
நாலு காலிற் பாய்ந்தது. -பண்டிதர் க.கச்சிதானந்தன்-

18. மெய்ப்பொருள் கல்வி

தலைசீவிப் பள்ளிக்கே ஓடு- நல்
தங்கப் பதுமையாம் தோழர்களோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! – அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

அழுக்கில்லா ஆடையே மேன்மை! – அதை
அணிவதாலல்லவோ உடற்குண்டாம் தூய்மை
ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது
ஓடடி ஓடடி பள்ளியை நோக்கி!

சின்னஞ் சிறு குயில் போல - இசை
சிந்திச் சிரித்து செவ்விதழ் காட்டு
பொன்னொத்த தோழர்களோடு – பள்ளி
போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு!

கற்பிப்போர் கண்கொடுப்போரே! – அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும் - நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும்!

-வாணிதாசன்-

அரும்பதங்கள்

பதுமை – உருவம்
மெய்ப்பொருள் - நிலையான பொருள்
கணக்காயர் - ஆசிரியர்
மேன்மை – உயர்வு
நாளும் - தினமும்

19. பாப்பா பாட்டு

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா – ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா.

-பாரதியார் -

தரம் 5

20. ஓடி வாருங்கள்

பிள்ளைகளே! பிள்ளைகளே!
ஓடி வாருங்கள்!
பிரியமுடன் கற்றிடலாம்
ஓடி வாருங்கள்!

குட்டிக் கதைகள் கேட்டிடலாம்
ஓடி வாருங்கள்!
குதுகலமாய் பேசிடலாம்
ஓடி வாருங்கள்!

விளையாடி மகிழ்ந்திடலாம்
ஓடி வாருங்கள்!
விந்தைகள் செய்திடலாம்.
ஓடி வாருங்கள்!

சித்திரங்கள் வரைந்திடலாம்
ஓடி வாருங்கள்!
சேர்ந்து பாடி ஆடிடலாம்.
ஓடி வாருங்கள்!

நாடகங்கள் நடித்திடலாம்
ஓடி வாருங்கள்!
நற்பண்புகளை வளர்த்திடலாம்.
ஓடி வாருங்கள்!

ஒற்றுமையாய் செயற்படலாம்
ஓடி வாருங்கள்!
ஓரணியில் இணைந்திடலாம்
ஓடி வாருங்கள்!

சாதனைகள் புரிந்திடலாம்
ஓடி வாருங்கள்!
சரித்திரம் படைத்திடலாம்
ஓடி வாருங்கள்!

வி.என்.எஸ்.உதயசந்திரன்-

21. கொண்டாட்டம்

மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது.
அழகுதோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது.

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது.
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது.
வண்ணக் கிளியும் வந்தி ருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.

www.teachmore.lk

நஞ்சைக் கக்கும் நாக பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளிந்தி டாமல்
அருகில் நின்று பார்க்குது

கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்.
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்.

-

வித்துவான்.க.வேந்தனார்.

22. என்னால் எது செய்ய முடியாது

‘‘என்னால் இதுசெய முடியாது!’’ - எனும்
எதிர்மறைப் பேச்சை விட்டுவிடு!
‘‘என்னால் எதுசெய முடியாது?’’எனும்
ஏற்ற கேள்வி கேட்டுவிடு!

எள்ளினும் சிறிய எறும்பைப் பார்! –அது
எதையும் இழுத்துச் செல்வதைப் பார்!
உள்ளம் கொண்ட ஊக்கத்தால் - அது
உன்னையும் கூட இழுத்துவிடும்!

புல்லும் வெளியே தலைநீட்ட - இப்
பூமியைத் துளைத்து வழிகாணும்!
கல்லும் அதனால் இடம்பெயரும்! –அதன்
காரணம் ஊக்கம், உழைப்பாகும்!

ஊக்கத் தோடு உழைத்துவிடு! –நீ
உயர்வு பெறுவாய்! இது உண்மை!
நோக்கம் யாவும் நிறைவேறும்! உனை
நோக்கி உலகம் கைகூப்பும்.

-டாக்டர் பூவண்ணன்-

23. நிச்சயம்

வண்ணச் சோலை தன்னிலே
வளரும் செடிகள் நிச்சயம்.
வளரும் செடிகள் மீதிலே
மலர்கள் உண்டு நிச்சயம்.

மலர்கள் தம்மைத் தேடியே
வண்டு வருதல் நிச்சயம்
வண்டு தேனை வாரியே
கொண்டு போதல் நிச்சயம்.

கொண்டு சென்ற தேனையே
கூட்டில் சேர்த்தல் நிச்சயம்
கூடு தன்னை மாந்தர்கள்
குலைத்து விடுதல் நிச்சயம்.

அழகு மிக்க கூட்டினை
அழித்து, நல்ல தேனையே
அடைய வேண்டின் அழியுமே
ஆயிரம் உயிர், நிச்சயம்!

- அழ வள்ளியப்பா-

24. உயர உயர ஏறலாம்

சிறகை விரிக்கும் பறவையே
சீக்கி ரத்தில் பறக்கலாம்.
மரத்தில் ஏறும் மனிதனே
மாம்ப ழத்தைப் பறிக்கலாம்!

கொத்தும் குப்பைக் கோழியே
கொத்தி உணவை உண்ணலாம்.
கத்திக் கரையும் காக்கையே
காக்கைக் கூட்டம் சேர்க்கலாம்!

நடந்து செல்லும் மனிதனே
நாடும் இடத்தை அடையலாம்
முடங்கிப் படுக்கும் சோம்பலால்
முடிவ துண்டோ எதுவுமே?

தேடித் தேடிப் படிப்பவர்
தெளிந்த அறிவை அடையலாம்.
ஓடி ஓடி உழைப்பவர்
உயர உயர ஏறலாம்!

-செல்ல கணபதி-

25. தேங்காய்

தென்னந் தோப்பு மூலையில்
தேங்காய் ஒன்று விழுந்தது
தூக்கம் கலைந்த நாய்க்குட்டி
தலையைத் திருப்பிப் பார்த்தது

நெருங்கி வந்து நின்றது
நக்கி நக்கிப் பார்த்தது
சலித்துக் கசந்து போனதால்
தரையில் உருட்டி விட்டது

பீர்க்கம் புதரை விலக்கியே
குட்டி அணில் வந்தது
ஏறி இறங்கிப் பார்த்தது
வேலிப் பக்கம் மறைந்தது

காகம் ஒன்று வந்தது
காயின் மீது நின்றது
அலகால் கொத்திப் பார்த்தது
சிறகடித்துப் பறந்தது

பூனை ஓடி வந்தது.
புரட்டிப் புரட்டிப் பார்த்தது.
மோப்பம் பிடித்து நின்றது
உருட்டி விட்டு நடந்தது.

காலை முதல் மாலை வரை
தேங்காய் அங்கு கிடந்தது
கவிழ்த்து வைத்த செம்புபோல்
வானம் பார்த்துக் கிடந்தது.

-பாவண்ணன்-

26. சந்திரன்

மீனினம் ஓடிப் பார்க்குதம்மா – ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா – அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா – மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா – பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாரயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா – உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா – கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா

-கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை-

27. பவளக்கொடி

பருத்தித்துறை யூராம்
பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்
அங்கவட்கோர் நாளில்
அடுத்ததுயர் கேளீர்

பாற்குடமுஞ் சுமந்து
பையப்பைய நடந்து
சந்தைக்குப் போம்போது
தான் நினைத்தாள் மாது
'பாலையின்று விற்பேன்
காசைப்பையில் வைப்பேன்'

முருகரப்பா வீட்டில்
முட்டை விற்பாள் பாட்டி
கோழி முட்டை வாங்கி
குஞ்சுக்குவைப் பேனே
புள்ளிக் கோழிக் குஞ்சு
பொரிக்குமிரண் டைஞ்சு
குஞ்சுகள் வளர்ந்து
கோழியாகும் விரைந்து
விரைந்துவளர்ந் திடுமே
வெள்ளைமுட்டை யிடுமே

முட்டைவிற்ற காசை
முழுவதுமெடுத் தாசை
வன்னச்சேலை சட்டை
மாதுளம்பூத் தொப்பி
வாசனை செருப்பு
வாங்குவேன் விருப்பு

வெள்ளைப்பட் டுடுத்து
மினுங்குதொப்பி தொடுத்து
கையிரண்டும் வீசிக்
கதைகள் பல பேசிச்
சுந்தரிபோல் நானே
சந்தைக்குப்போ வேனே

அரியமலர் பார்ப்பாள்
அம்புஜமும் பார்ப்பாள்
பூமணியும் பார்ப்பாள்
பொற்கொடியும் பார்ப்பாள்
சரிகைச்சேலை பாரீர்
தாவணியைப் பாரீர்
வன்னச்சட்டை பாரீர்
வடிவழகு பாரீர்
என்றுயாரும் புகழ்வர்
என்னையாரோ இகழ்வர்
'பாரும்பாரும்' என்று
பவளக்கொடி நின்று
சற்றுத்தலை நிமிர்ந்தாள்
தையலென்ன செய்வாள்

பாலுமெல்லாம் போச்சு
பாற்குடமும் போச்சு
மிக்கத்துய ரோடு
வீடுசென்றாள் மாது
கைக்குவரு முன்னே
நெய்க்குவிலை பேசேல்.

-ஆக்கம்: நவாலியூர் சோமசுந்தரப் புலவர் -

28. தவளைக்கூத்து

டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்

சல்லரி நான்கு மத்தள மேழு
தவிலும் சேர்ந்தே டும் டும்
மெல்லென வீங்கும் புல்லாங்குழலும்
வீணையும் சேர்ந்தே கும் கும் கும்

குப்பை மிதந்திடும் பள்ளத்தி லேயொரு
கூத்து நடக்குது தெய் தெய் தெய்
செப்பு நெருஞ்சியும் வட்டத் தகரையும்
சீலை விரிக்குது மெய் மெய் மெய்

www.teachmore.lk

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத் தேரை குழலூத
மொட்டைத் தவளை நாட்டிய மாட
மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

கொட்டும் மழையும் தாளம் போடக்
குளிரும் காற்றும் கவிபாட
பொட்டல் தரையில் தவளைகள் சேர்ந்தே
போடுது கூத்து தெய் தெய் தெய்

-திமிலைத்துமிலன் -

29. புன்னகை வேண்டும்

ஒழுக்கம் சிறந்தது பாப்பா – உன்
உயிரின் உயர்ந்தது பாப்பா
நன்னெறி சேர்த்திட வேண்டும் - பாப்பா
நல்லோரைச் சார்ந்திட வேண்டும்

பொய் கொலை களவு வஞ்சம் - உடன்
போக்கிடு வாயுன் நெஞ்சம்
அன்பே இன்ப ஊற்று – இதய
ஆசையுடனது போற்று

வாழ்வைக் கெடுப்பது கோபம் - உயிர்
வதை செய்வது பாவம்
பாபப் பலன்பரி நாசம் - ஊர்
பேசுவதும்பரி காசம்

இன்சொல் பேசுவாய் நாளும் - என்றும்
இவ்வுல குன்பெயர் வாழும்
புன்னகை பூத்திட வேண்டும் - பாப்பா
எண்ணிய பேறெய்தி வாழ்வாய்

-பண்டிதர் க. வீரகத்தி-

30. கிளியக்கா

பச்சைப் பச்சைக் கிளியக்கா!
பழங்கள் கேட்கும் கிளியக்கா!
மெச்சும் வாய்தான் சிவந்தவளே!
மெத்தப் பச்சை நிறத்தவளே!
பசுமைச் சோலைக்குள்ளே நீ
பச்சைக் கிளியாய் ஒளிந்திருப்பாய்!
பசும் பொன் மாலை கழுத்தினிலே!
பார்க்க அழகாய் அணிந்திருப்பாய்!

31. திருக்குறள்

நன்றி மறவாமை

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

பொறுமையுடைமை

“ஒறுத்தார்க்கு ஒரு நாள் இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றும் துணையும் புகழ்”

வாய்மை

“உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்”

திருவள்ளுவர்-

32. நல்வழி

சாதி இரண்டு

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. -வெண்பா 2-

மரியாதையே தேட்டம்

ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். –வெண்பா 8-

நல்லகுடிப்பிறந்தார் இயல்பு

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும், அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிபிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து. –வெண்பா 9-

உழுதுண்டு வாழ்தலே உயர்ந்தது

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. – வெண்பா 12-

மூடனுக்கு எப்படி விளக்குவது

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே – தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோண்றாது உணர்வு. – வெண்பா 35-

-ஔவையார் -

33. கிராமிய விளையாட்டுப் பாடல்கள்

கீச்சு மாச்சுத் தம்பலம்

கீச்சு மாச்சுத் தம்பலம்
கீயா மாயா தம்பலம்
மாச்சு மாச்சுத் தம்பலம்
மாயா மாயா தம்பலம்

கிட்டிப்புள் பாடல்

ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு
பாலாறு பாலாறு பாலாறு....

ஆத்துக் கட்டு அலம்பக் கட்டு
அவிட்டுக் கட்டு இறுக்கிக் கட்டு
இறுக்கி இறுக்கிக் கட்டு...

கீழாறோலை மேலாறோலை
எண்ணிப் பார்த்தால் பதினாறோலை
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு....

34. கும்மிப் பாடல்

கும்மியடி பெண்ணே கும்மியடி – நீ
குனிந்து வளைந்து கும்மியடி
குழந்தைப் பெண்ணே கும்மியடி – நீ
குலத்தைக் காத்திட கும்மியடி

தையும் பிறந்தது கும்மியடி – நீ
தரணி சிறக்கக் கும்மியடி
தை தை என்றே கும்மியடி – நீ
தைப் பொங்கலன்று கும்மியடி

சித்திரை வந்தது கும்மியடி – நீ
சிறப்புடன் வாழக் கும்மியடி
சின்னப் பெண்ணே கும்மியடி – நீ
சிட்டுப் போலக் கும்மியடி
ஆடி பிறந்தது கும்மியடி – நீ
ஆடி மகிழக் கும்மியடி
ஆடிப்பெருக்கில் கும்மியடி – நீ
ஆனந்தமாய்க் கும்மியடி

www.teachmore.lk

35. ஆடிப்பிறப்பு

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டுநல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே.

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே.

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே.

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

-சோமசுந்தரப்புலவர்-

36. எந்த நாள்

திசையை மாற்றிச் சூரியன்
திரும்பி வந்த நாளெது?
பசியைப் போக்க உழுபவர்
பலனைக் காணும் நாளெது?

கன்று காளை பசுவெல்லாம்
களிப்பில் துள்ளும் நாளெது?
குன்றிடாத மகிழ்ச்சியைக்
கொடுக்கும் நல்ல நாளெது?

ஆடிப் பாடும் சிறியவர்
அமைதி கொண்ட பெரியவர்
நாடி நிற்கும் நாளெது?
நாடு போற்றும் நாளெது?

இன்பம் நல்கும் நாளெது?
துன்பம் ஓட்டும் நாளெது?
அன்பு வாழ்த்துக் கூறிடும்
அருமையான நாளெது?

எங்கும் இன்ப வெள்ளமே
தங்கு மாறு செய்திடும்
பொங்கல் என்னும் நாளது!
எங்க ளுக்குத் தெரியுமே!

-பூவண்ணன்-

37. நல்வழி

ஈயாதவரே இழிந்த குலத்தவர்
சாதி இரண்டுஒழிய வேறுஇல்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர்: இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

மரியாதையே தேடத்தகுந்த செல்வம்
ஈட்டும் பொருள்முயற்சி எண்இறந்த ஆயினும்ஊழ்
கூட்டும் படிஇன்றிக் கூடாவாம்: - தேட்டம்
மரியாதை காணும்: மகிதலத்தீர்! கேண்மீன்:
தரியாது காணும் தனம்!

நற்குடிப் பிறந்தார் வறுமை உற்றாலும் இல்லை என மாட்டார்
ஆற்றுப் பெருக்குஅற்று, அடிசுடும்அந் நாளும் அவ்வாறே
ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும்: - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து.

உழுது உண்ணும் வாழ்க்கையே ஒப்பற்ற வாழ்க்கை
ஆற்றங் கரையின் மரமும், அரசுஅறிய
வீற்றுஇருந்த வாழ்வும் விழும்அன்றே: - ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லை கண்டீர்
பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு.

உரைத்தாலும் பேதைக்கு உணர்வு தோன்றாது
பூவாதே காய்க்கும் மரமும் உள: மக்களும்
ஏவாதே நின்றுஉணர்வார் தாம்உளரே: தூவா
விரைத்தாலும் நன்றுஆகா வித்துஎனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு.

38.எலியும் பூனையும்

பூனை: எலியம்மா, எலியம்மா,
எட்டிப் பாரம்மா.
இனிமை யான பண்டம் இங்கே
இருக்கு தேஅம்மா.

எலி: பூனையாரே, பூனையாரே,
என்ன பண்டமோ?
போளி,அல்வா, பூந்தி என்று
புரியச் சொல்லுமே.

பூனை: வளையை விட்டு வெளியில் வந்தால்
தெரிந்து கொள்ளலாம்.
வாய்க்கு இனிய பண்டம் இதனை
உண்டு மகிழலாம்.

எலி: பொந்து வழியாய் அந்த இனிப்புப்
பண்டந் தன்னையே
போட்டு விட்டுப் போக லாமே!
பூனை நண்பரே.

பூனை: என்ன செய்வேன்? இந்தப் பொந்தோ
சின்னஞ் சிறியது.
என்னி டத்தில் இருக்கும் பண்டம்
மிகவும் பெரியது.

எலி: பிட்டுப் பிட்டுச் சிறிது சிறிதாய்
எனது வளையிலே
போட்டு விட்டு போக லாமே
பூனை நண்பரே.

பூனை: கல்லைப் போலக் கடின மாகப்
பண்டம் இருப்பதால்
கடித்துக் கொறிக்கும் சக்தி உன்போல்
எனக்கும் இல்லையே!

எலி: இல்லை யானால், தொல்லை யில்லை
வளையின் வாயிலே
இனிப்புப் பண்டம் அதனைப் போட்டுச்
செல்வீர் நண்பரே!

பூனை: வளையின் அருகே போட்டுச் சென்றால்
என்ன ஆகுமோ?
வட்ட மிட்டுத் திரியும் காகம்
விட்டு வைக்குமோ?

எலி: ஆசை காட்டி மோசம் செய்யும்
அற்பப் பூனையே,
அசடு நானும் அல்ல, அல்ல
அறிந்து கொள்ளுவாய்.

பூனை: அடடா இபோல் நீயும் என்னை
நினைக்க லாகுமோ?
அருமை யான பண்டந் தன்னை
மறுக்க லாகுமோ?

எலி: இனிப்பை நானும் தின்ப தற்கோ
வருந்தி அழைக்கிறாய்?
இல்லை இல்லை என்னைப் பிடித்துத்
தின்ன பார்க்கிறாய்.

உலகில் உள்ள பண்டம் யாவும்
கிடைப்ப தாயினும்,
உயிரைக் கொடுக்க உலகில் எவரும்
துணிந்து வருவாரோ?

வளையை விட்டே உனது வயிற்றில்
வந்து சேர்ந்திட
மடையனல்ல வழியைப் பார்த்து
நடையைக் கட்டுவாய்!.

-அழ.வள்ளியப்பா-

39. மயிலுக்குப் போர்வை

இயற்கை அழகினைக் கண்டுகண்டு – பெரும்
இன்ப மடைந்திடும் ஓர் அரசன்,
உயர்ந்த மலைகளைக் கண்டிடவே – மிக
உல்லாச மாகக் கிளம்பினனே!

மலைவளம் கண்டு வருகையிலே – அங்கு
மடமட வென்று மழைபொழிய,
பலகிளை உள்ள மரத்தடியில் - சென்று
பதுங்கினன் அந்த அரசனுமே.

பயத்தால் உடலும் நடங்குதல்போல் - குளிர்
பரவிட மன்னன் நடுங்கினனே,
உயர்ந்த மதிப்புள்ள போர்வையினால் - நன்றாய்
உடம்பை இறுகவே மூடினனே.

மேகங்கள் கூடிடக் கண்டதுமே – அங்கு
வேகமாய் ஓர்மயில் ஓடிவந்தே,
தோகை விரித்துநின் றாடியதே – மேலும்
தொண்டையைத் தூக்கி அகவியதே!

ஐயோ! குளிர்மிக வீசுவதால் - இந்த
ஆண்மயில் மேனி நடுங்குதம்பா!
ஐயா, உதவுங்கள் என்கிறதோ – மயில்?
ஆமாம், அதைத்தான் உரைக்கிறது.

எண்ணினன் இப்படி மன்னனுமே – உடன்
எடுத்தனன் போர்த்திய போர்வையினை,
சென்றனன் அந்த மயிலருகே – உள்ளம்
திருப்தி அடைந்திடப் போர்த்தினனே.

உடலும் மழையால் குளிர்ந்திடவே – அவன்
உள்ளம் கொடையால் குளிர்ந்ததுவே,
கொடையில் சிறந்தோன் பெயர் சொல்லவா? – மக்கள்
கொண்டாடும் பேகன் அவனல்லவா?

அழ.வள்ளியப்பா-